டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 26.04.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 256 - Madurai | Online Edition

# தமிழகத்தில் நான்கு மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஏப்.25

தமிழகத்தில் கோவை, ஈரோடு, சேலம், தர்மபுரி உள்ளிட்ட மாவட்டங்களில் ஏப்.30, மே 1 தேதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வடக்கு உள் கர்நாடகா முதல் குமரிக்கடல் வரை தெற்கு உள் கர்நாடகா மற்றும் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் 26.4.2026ம் தேதியில் ஒரு சில இடங்களிலும், 27ம் தேதி மேற்கூறிய இடங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இதர தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 28, 29 தேதிகளில் நீலகிரி, கோவை, திருப்பூர் மற்றும் தேனி மாவட்டங் களில் ஒரு சிலஇடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும், தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

30-ம் தேதி கோவை, ஈரோடு, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர் மாவட்டங்களில், மே 1- ம் தேதி மேற்கூறிய மாவட்டங்கள் மற்றும் நாமக்கல் மாவட்டத்திலும் ஒரு சில இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய

மிதமானது முதல் கன மழையும், இதர தமிழக பகுதிகளில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக் கூடும்.

தமிழகத்தின் உள் மாவட்டங்களில் நாளை முதல் 29-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். கடலோர தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை ஒட்டியே இருக்கக்கூடும்.

# கறிக்கோழியின் பண்ணை கொள்முதல் விலை சரிவு!

நாமக்கல், ஏப்.25

நாமக்கல், சேலம், ஈரோடு, திருப்பூர், பல்லடம் உள்பட பல பகுதிகளில் 25 லட்சத்திற்கும் மேற்பட்ட கறிக்கோழிகள் வளர்க்கப்படுகின்றன. இந்த கறிக்கோழிகள் நாடு முழுவதும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்நிலையில் கோடை வெப்பம் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், பண்ணை கறிக்கோழியின் கொள்முதல் விலை ஏப்.25ல்கிலோவுக்கு ரூ.10 குறைக்கப்பட்டு ரூ.96-ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

வெப்பம் காரணமாக கோழிகள் இறப்பதை தவிர்க்கவும், விற்பனையை சீராக்கவும் எடுக்கப் பட்டுள்ள இந்த முடிவால் பண்ணையாளர்கள் கோடை வெப்பம் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், பண்ணை கறிக் கோழியின் கொள்முதல் விலை கிலோவுக்கு ரூ.10 குறைக்கப் பட்டு ரூ.96-ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

வெப்பம் காரணமாக கோழிகள் இறப்பதை தவிர்க்கவும், விற்பனையை சீராக்கவும் எடுக்கப்பட்டுள்ள இந்த முடிவால் பண்ணையாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

இருப்பினும், கொள்முதல் விலை குறைந்துள்ளதால் மாநிலம் முழுவதும் உள்ள இறைச்சி கடைகளில் சில்லறை விற்பனை விலையும் கணிசமாக குறைய வாய்ப்புள்ளது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# வரத்து குறைவால் தக்காளி, பீன்ஸ் விலை உயர்வு!

சென்னை, ஏப்.25

தமிழ்நாட்டில் நிலவும் கடும் வெயிலின் தாக்கத்தால் சென்னை கோயம்பேடு காய்கறி சந்தையில் காய்கறி வரத்து வெகுவாக குறைந்துள்ளது.

சென்னை கோயம்பேடு காய்கறி சந்தையை பொறுத்தவரை, தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களில் இருந்து காய்கறிகள் கொண்டு வரப்பட்டு இங்கு விற்பனை செய்யப்படும். மேலும் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இருந்து ஒவ்வொரு நாளும் லட்சக்கணக்கான மக்களும், சில்லறை மற்றும் மொத்த காய்கறி விற்பனை வியாபாரிகளும் இந்த மார்க்கெட்டிற்கு வந்து காய்கறிகளை வாங்கிச் செல்கின்றனர்.

எனவே கோயம்பேடு காய்கறி சந்தைக்கு நாளொன்றுக்கு வழக்கமாக 8,000 முதல் 10,000 டன் காய்கறிகள் விற்பனைக்கு வரும். ஆனால், தமிழ்நாட்டில் நிலவும் கடும் கோடை வெயில் காரணமாக காய்கறிகளின் வரத்து 50 சதவீதம் குறைந்துள்ளதாக கோயம்பேடு வியாபாரிகள் தெரிவித்து உள்ளனர். இதன் காரணமாக பல காய்கறிகளின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது.

வரத்து குறைவால் அனைத்து காய்கறிகளும், கிலோவிற்கு ரூ.5 முதல் 10 வரை அதிக விலையில் விற்பனை செய்யப்படு கிறது. குறிப்பாக, கடந்த வாரங்களில் மொத்த விற்பனையில் கிலோ 25 ரூபாய்க்கு விற்ற தக்காளி தற்போது 40 ஆக உயர்ந்துள்ளது. அதன்படி, கேரட் மற்றும் தக்காளி கிலோ 40 ரூபாய்க்கும், வெண்டைக்காய் 40 முதல் 50 ரூபாய்க்கும், முருங்கைக்காய் 40 முதல் 50 ரூபாய்க்கும், பீட்ரூட் 30 முதல் 40 ரூபாய்க்கும், பீர்க்கங்காய் 50 ரூபாய்க்கும், புடலங்காய் 40 ரூபாய்க்கும், உருளைக்கிழங்கு 20 முதல் 30 ரூபாய்க்கும், பீன்ஸ் 90 முதல் 120 ரூபாய்க்கும் விற்பனையாகி வருகிறது. வரும் நாட்களில் வெயில் தாக்கம் நீடித்தால், விலை மேலும் உயரக்கூடும் என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## அடுப்பில்லா சமையலில் எளிமையான, சத்தான மற்றும் கண்கவர் உணவுகளே மிகவும் பொருத்தமானவை - ஓர் அலசல்

நேற்றைய தொடர்ச்சி...

### அடுப்பில்லா சமையல் குறிப்புகள் சில என்னென்ன?

**பலாப்பழச் சாறு**

**தேவைப்படும் பொருட்கள்**

நன்கு பழுத்த பலாப்பழ சுளைகள் கொட்டை நீக்கியது ஒரு கப்

தேன் ஒரு தேக்கரண்டி

தேங்காய் பால் ஒரு கப்

வெல்லத்தூள் நாலு தேக்கரண்டி

ஏல பொடி ரெண்டு சிட்டிகை

தண்ணீர் தேவைக்கு ஏற்ப



**செயல்முறை**

பலாப்பழத்தை மிக்ஸியில் விட்டு அரைத்து எடுத்துக்கொள்ள வேண்டும். அத்துடன் தேங்காய் பால், தேன், வெல்லத்தூள், ஏல பொடி சேர்த்து கலக்கி தேவைக்கேற்ப தண்ணீர் சேர்த்து சாப்பிடலாம்.



**பயன்கள்**

குடலுக்கும் உடலுக்கும் நன்மை பயக்கிறது.

**தர்பூசணி சாறு**

**தேவைப்படும் பொருட்கள்**



தர்பூசணி ஒரு துண்டு

எலுமிச்சை சாறு அரை தேக்கரண்டி

தண்ணீர் தேவைக்கேற்ப

தேன் ஒரு தேக்கரண்டி

நாட்டு வெல்லம் தேவைக்கேற்ப

**செய்முறை**

தர்பூசணியை நன்றாக சிறுது சிறிதாக துண்டுகளாக செய்து அதை ஒரு கப்பில் சேகரித்து அவற்றின் மீது எலுமிச்சை சாறு, தண்ணீர், தேன், நாட்டு வெல்லம் போட்டு ஒவ்வொரு துண்டுகளாக எடுத்து வாயில் போட்டு அதை மேல் அன்னத்தின் வைத்து நாக்கால் நசுக்கி சாறு உடன் சாப்பிட வேண்டும். அல்லது துண்டுகளாக நறுக்கிய தர்பூசணியை மிக்ஸியில் போட்டு நன்றாக அரைத்து சாறு எடுத்து அவற்றிலும் எலுமிச்சை சாறு, தண்ணீர், தேன், வெல்லம் கலந்து சுவையாக குடிக்கலாம்.

**பயன்கள்**

கோடைக்கு ஓர் இதமான குளிர்ச்சியான சத்தான பானம்.

சிறுநீர் கோளாறுகளை அகற்றுகிறது

குடலுக்கு நல்லது

பசியின்மையை நீக்குகிறது

அஜீரணம் இவற்றிற்கு ஒரு நல்லமருந்தாக பயன்படுகிறது

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**

# பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சரிவு! விவசாயிகள் கவலை!!

ஈரோடு, ஏப்.25

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து கீழ் பவானி வாய்க்கால் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், பவனி சாகர் அணையின் நீர்மட்டம் வேகமாக சரிந்து வருகிறது. கடந்த சில நாட்களாக பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்யாததால் அணைக்கான நீர்வரத்து கணிசமாக குறைந்து உள்ளது.

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 66.17 அடியிலிருந்து 65.62 அடியாக சரிந்து உள்ளது. தற்போதைய நிலவரப்படி பவானிசாகர் அணையின் நீர் இருப்பு 9.2 டிஎம்சி ஆகும். காலை நிலவரப்படி இந்த அணைக்கு 146 கன அடி நீர்வரத்து வந்து கொண்டிருக்கிறது. ஈரோடு, கரூர், திருப்பூர் மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாகவும், சுமார் 2.47 லட்சம் ஏக்கர் விளைநிலங்களின் வாழ்வாதாரமாகவும் உள்ளது பவானிசாகர் அணை.

மொத்தம் 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் முக்கிய நீர் பிடிப்பு பகுதியாக நீலகிரி மலைப்பகுதி இருந்து வருகிறது.

இந்த சூழலில் கடந்த சில நாட்களாக பவானிசாகர் அணைக்கான நீர்வரத்து குறைந்து வருகிறது. அதே நேரம் பாசனத்துக்கு நீர்வரத்தை விட அதிக அளவில் தொடர்ந்து தண்ணீர் திறக்கப்பட்டு வெளியேற்றப்பட்டு வருவதால் பவானி சாகர் அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது. பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்கால்



பாசனத்திற்கு 2300 கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது. பவானி ஆற்றுக்கு 200 கன அடி நீர் என மொத்தம் பாசனத்திற்காக 2500 கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஈரோடு மாவட்ட அணைகளின் நீர்பிடிப்பு பகுதியில் போதுமான மழை இல்லாததன் காரணமாக நீர்மட்டம் சரிந்து வருவது விவசாயிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தி இருக்கிறது. மேலும் பவானிசாகர் அணையின் நீர் இருப்பு, கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது சற்று குறைவாக உள்ளது. கடந்த ஆண்டு இதே நேரம் சுமார் 72.28 அடி நீர்மட்டம் இருந்தது குறிப்பிடத்தக்கது.



# சேலம் மாவட்ட வானிலை அறிக்கை

சேலம், ஏப்.25

சேலம் மாவட்டம், மாவட்ட வேளாண் வானிலை மையம், சந்தியூர், வேளாண்மை அறிவியல் நிலையம், திட்ட ஒருங்கிணைப்பாளர், இரா.விஜயன், மா.இரவி, பெ.கோகிலா மற்றும் செ.பிரபாகரன் கூறியதாவது.

25.04.26 முதல் 29.04.26 வரையிலான ஐந்து நாட்களுக்கான சேலம் மாவட்ட வானிலையில், வானம் பெரும்பாலும் லேசான மேக மூட்டத்துடன் காணப்படும் மற்றும் மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் 29.04.26ல் லேசான மழைக்கு வாய்ப்பு உள்ளது. பகல் வெப்பம் 39.0° செ. (102.2° பா)-க்கு மிகாமலும், இரவு வெப்பம் 26.0° செ. (78.8° பா) யாகவும் காணப் படும். காற்றின் திசை பெரும்பாலும் தெற்கு மற்றும் கிழக்கு திசையிலிருந்து வீச அதன் வேகம் மணிக்கு 2 - 4 கி.மீ என்றளவில் வீசும். காற்றின் ஈரப்பதம் 30-75% ஆக நிலவும்.

**பின்வரும் சாகுபடியாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை**

● **தர்பூசணி**

தற்போது நிலவி வரும் தட்பவெப்ப சூழ்நிலை காரணமாக தர்பூசணி சாகுபடி செய்துள்ள பகுதியில் இலைப்பேண் தாக்குதலினால் சேதம் தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஊதாவர்ண ஒட்டும் பொறி ஒரு ஏக்கருக்கு 5 வீதமும், இலைவழி தெளிப்பானாக வேப்ப எண்ணெய் ஒரு லிட்டருக்கு 3 மில்லி வீதம் கலந்து தெளிக்க வேண்டும். இதை தொடர்ந்து பொருளாதார சேத நிலை தாண்டும் போது தையோமித்தாக்சம் என்ற பூச்சிக் கொல்லியை ஒரு லிட்டருக்கு 2 கிராம் வீதம் கலந்து ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் தெளிக்கவேண்டும்.

● **கத்தரி**

தற்போது கோடைக்காலம் துவங்கி விட்டதால், கத்தரி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் விளைச்சலை அதிகரித்து நல்ல மகசூல் பெற ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் என்ற அளவில் காய்கறி நுண்ணூட்ட கலவையுடன் தகுந்த ஒட்டும் திரவம் கலந்து நட்ட 30வது நாள் முதல் அடுத்த 15 நாட்கள் இடைவெளியில் இலைவழி தெளிப்பு செய்ய வேண்டும். இது

இடைவெளியில் இலைவழி தெளிப்பு செய்ய வேண்டும். இது பூக்கள் உதிர்வைத் தடுத்து காய்களின் எடை அதிகரிக்க வழிவகுக்கும்.

● **மரவள்ளி**

தற்போது நிலவி வரும் தட்பவெப்ப சூழ்நிலையில் மரவள்ளியில் செம்பேன் தாக்குதல் தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த இலைவழி தெளிப்பாக புரோபர்கிட் என்ற இரசாயண பூச்சிக்கொல்லி மருந்தை 1 லிட்டர் தண்ணீருக்கு 1டி மில்லி வீதமும் ஒட்டும் திரவம் 1 மில்லி / 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

● **தென்னை**

தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ தாக்குதல் தென்படுகிறது. இதனை கட்டுப்படுத்த வேப்ப எண்ணெய் 5 மில்லியுடன் ஒட்டும் திரவம் 1.5 மில்லி / லிட்டர் தண்ணீரில் கலந்து பவர்கண் இயந்திரத்தின் மூலம் தெளிக்கவும் மற்றும் 3 அடி X 1.5 அடி மஞ்சள்அட்டை – 10 எண் / ஏக்கருக்கு பரவலாக கட்டவேண்டும். கரும்பூஞ்சனத்தை மைதா மாவு கரைசலை தெளித்தும் கிரைசோபிட் இரை விழுங்கிகள் – 400 எண்ணிக்கைகள் மற்றும் என்கார்சியா ஒட்டுண்ணிகள் – 100 எண்ணிக்கைகள் வீதம் ஒரு ஏக்கருக்கு விட்டும் கட்டுப்படுத்தலாம். ரசாயன மருந்து தெளிப்பதை தவிர்க்க வேண்டும்.



**● கொடிவகை காய்கறிகள்**

வரும் நாட்களில் வெப்பநிலை அதிகரிக்க வாயப்புள்ளதால், காய்கறிகள் முக்கியமாக கொடிவகை காய்கறிகள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், காய்ந்த இலை, புற்கள் கொண்டு மண்ணில் மூடாக்கு அமைக்கவும். இவ்வாறு செய்வதால் மண்ணின் ஈரப்பதம் பாதுகாக்கப்பட்டு பயிரின் வளர்ச்சி மேம்படும்.

**● வெண்டை**

தற்போது கோடைக்காலம் துவங்கி விட்டதால், வெண்டை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் விளைச்சலை அதிகரித்து நல்ல மகசூல் பெற ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் என்ற அளவில் காய்கறி நுண்ணூட்ட கலவையுடன் தகுந்த ஒட்டும் திரவம் கலந்து நட்ட 30வது நாள் முதல் அடுத்த 15 நாட்கள் இடைவெளியில் இலைவழி தெளிப்பு செய்ய வேண்டும். இது பூக்கள் உதிர்வைத் தடுத்து காய்களின் எடை அதிகரிக்க வழிவகுக்கும்.

**● கால்நடைகள்**

கோடை காலத்தில் கறவை, சினை மாடுகள் மற்றும் ஆடுகளில் வெப்ப அலற்சியினை தவிர்க்க காலை (6.30 முதல் 10 மணி வரை) மற்றும் மாலை (4.30 முதல் 6.30 வரை) நேரத்தில் மட்டும் மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டும்.

அதிக வெய்யில் உள்ள நேரங்களில் மேய்ச்சலுக்கு அனுப்பாமல் கொட்டகையிலோ அல்லது மர நிழலியோ தங்க வைக்க வேண்டும். மேலும் மாட்டினை தினசரி இரண்டு அல்லது மூன்று முறை குளிர்ந்த நீரினால் குளிப்பாட்ட வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூர், சேலம் – 636 203.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

**Office**
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

**Factory**
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# போன்சாய் மரம் வளர்ப்பு ஒரு கலை தெரியுமா?



மரங்கள் இயற்கையின் வரங்கள் என்பார்கள். பெரிய அளவில் வளரும் மரங்களை வீட்டுக்குள் சிறியதாக வளர்த்து அதனுடைய அழகை ரசிக்க உருவான ஒரு கலை தான் இந்த போன்சாய் (BONSAI).

சீனாவில் பென்ஜிங் (PENJING) என்ற பெயரில் சுமார் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றி பின்னர் ஜப்பானுக்கு பரவியது.

அதிகாலத்தில் மருத்துவ மூலிகைகளை பாதுகாக்கவும், அழகுக்காகவும், சிறிய தட்டுகளில் (பாத்திரங்கள்) வளர்க்கப் பட்டு தான் பிரபலமடைந்தது இந்த போன்சாய் செடி வளர்ப்பு.

**போன்சாய் என்றால் என்ன அர்த்தம் தெரியுமா?**

சீன மொழியில் போன் என்றால் (தொட்டி/தட்டு) என்றும் சாய் என்றால் (மரம் / செடி) என்று அர்த்தம். இது காலவாக்கில் உலகம் முழுவதும் பரவி உள்ளன.

**தமிழகத்திற்கு ஏற்ற போன்சாய் மரங்கள் என்னென்ன?**

பொதுவாக போன்சாய் மரங்களுக்கு சிறிய இலையும் வடிவமைக்க எளிதான தண்டு பாகம் உடைய மரங்கள், செடிகள் தேவைப்படும். நம்முடைய தட்ப வெப்ப நிலைக்கேற்ப ஆல், அரசு, வாகை, வேம்பு, புங்கம், புளி, கொன்றை, நாவல், சப்போட்டா போன்ற மரங்களும் ஜப்பானிய மேபிள், போனிடெயில் பாம் போன்ற வெளிநாட்டு ரகங்களும் வளர்க்க ஏற்றதாகும் (CONIFERS TREES).

**போன்சாய் வளர்ப்பு முறை?**

போன்சாய் வளர்ப்பில் கடைபிடிக்க வேண்டிய முக்கியமான தொழில்நுட்பம் என்றால் (கத்திரித்தல் மற்றும் வடிவமைத்தல் (WIRING). இது ஒரு MINIATURE PLANT.

பெரிய மரத்தை சிறிய தொட்டியில் சிறிய தோற்றத்தில் வளர்ப்பது என்பது சாதாரண வியமல்ல. இதற்கு பொறுமையும் அடிப்படை அறிவும் பராமரிக்கவும் தெரிய வேண்டும்.

**வளர்ப்பு முறை**

ஒரு சிறிய தொட்டியில் முதலில் சிறிய செங்கல் துண்டுகள் மற்றும் மக்கிய சாண உரமிடவேண்டும். பின்னர் அதில் வேர்கள் கத்தரிக்கப்பட்டு அதனுடைய வளர்ச்சியை மட்டுப் படுத்திய சிறிய தாவரங்கள் (செடி) நட்டு பராமரிக்க வேண்டும். தேவைக்கேற்ப நீர் தெளிக்க வேண்டும். நீர் எக்காரணம் கொண்டு தேங்க கூடாது. இது பெரியதாக வளராமல் அவ்வப் போது அதனை கத்தரித்தும் வேர்களை அப்புறப்படுத்தியும் பராமரிக்க வேண்டும். இது வீடுகளில் உட்புற அலங்காரத் திற்கு (INDOOR DECORATING) நன்றாக இருக்கும். 100 - 200 வயதான மரங்களையோ செடிகளையோ இதில் வளர்க் கலாம். வயது கூட கூட இதனுடைய மதிப்பு (VALUE) உயரும்.

**போன்சாய் மரங்களால் என்ன நன்மை**

1) வீடுகளில் இயற்கை வனம் போன்ற அமைப்பு உருவாக்கம்

2) நேர்மறை ஆற்றல் (PASSITIVE ENGERY) உருவாக்கம்

3) INDOOR DECREATION ஏற்றது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# பட்டுக்கூடுகள் ரூ.4 லட்சத்திற்கு ஏலம்



தர்மபுரி, ஏப்.25

தர்மபுரி பட்டுக்கூடு ஏல அங்காடிக்கு வரத்து சரிவால் நேற்று முன்தினம் பட்டுக்கூடுகள் மொத்தம் ரூ.4 லட்சத்திற்கு ஏலம் போனது.

தர்மபுரி பட்டு வளர்ச்சி துறை சார்பில், பட்டுக்கூடு ஏல அங்காடி, தர்மபுரி நான்கு ரோடு அருகே செயல்பட்டு வருகிறது. இந்த அங்காடிக்கு தர்மபுரி, பென்னாகரம், பாலக்கோடு, மாரண்டஹள்ளி பகுதிகளில் இருந்தும், ஈரோடு சித்தோடு, சத்தியமங்கலம், கரூர், திருவண்ணாமலை பகுதிகளில் இருந்தும் தினமும் 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் பட்டுக் கூடுகளை கொண்டு வந்து ஏலத்தில் பங்கேற்கின்றனர். தர்மபுரி ஏல அங்காடியில் தாங்கள் கொண்டு வரும் பட்டுக் கூடுகளுக்கு அதிகபட்ச விலை கிடைப்பதால், ஏராளமான விவசாயிகள் வந்து ஏலத்தில் கலந்து கொள்கின்றனர்.

தர்மபுரி, சேலம் மற்றும் சுற்றுவட்டாரங்களை சேர்ந்த 15 விவசாயிகள் 805 கிலோ வெண் பட்டுக்கூடுகளை கொண்டு வந்திருந்தனர். இந்த பட்டுக்கூடுகள் ரூ.4 லட்சத்து 95 ஆயிரத்து 79க்கு ஏலம் போனது.




# ரூ.4 கோடிக்கு ஆடுகள் விற்பனை

சேலம், ஏப்.25

சேலம் மாவட்டம், எடப்பாடி கொங்கணாபுரம் வாரச்சந்தையில் ரூ.4 கோடிக்கு ஆடுகள் விற்பனையானதால் வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பல்வேறு மாவட்டங்களில் இருந்து 2,000க்கும் மேற்பட்ட ஆடுகளை வியாபாரிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். 20 கிலோ எடையுள்ள செம்மறி ஆடு ரூ.9,000 வரையும், 30 கிலோ எடையுள்ள ஆடுகள் ரூ.17,500 வரையும் விற்பனை செய்யப்பட்டது.




# எண்ணெய் வித்து பயிர்களின் சாகுபடி தொழில் நுட்பங்கள் மற்றும் ஒருங்கிணைந்த உரம் மேலாண்மை பற்றி பட்டயப் படிப்பு மாணவர்களுக்கு வகுப்பு நடந்தது




பெரம்பலூர், ஏப்.25

பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண் அறிவியல் நிலையத்தில் உரம், பூச்சி மருந்து விதை விற்பனை செய்ய உரிமம் பெற வேண்டியதற்கான பட்டயப் படிப்பு வகுப்பில் வேளாண்மை உதவி இயக்குனர் தரகட்டப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் வகுப்பு எடுத்தார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் வாலிகண்ட புரத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் ஆய்வு மையம், ஹைதராபாத்தில் உள்ள மேனேஜ் நிறுவனம்,மற்றும் குடுமியான் மலையில் உள்ள சமிதி ஆகியவைகள் மூலம் இந்த பட்டய படிப்பு ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது. நேற்று முனைவர் பொன் விழி ரம்யா, ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், கே வி கே ஒருங்கிணைப்பாளர் வசந்த் குமார், வேளாண்மை அலுவலர் தனபால், கே வி கே விஞ்ஞானி டாக்டர் புனிதாவதி, ஜே எஸ் ஏ வேளாண்மை கல்லூரி உதவி பேராசிரியர் டாக்டர். ஆர். சுகன்யா கலந்து கொண்டு மாணவர் களுக்கு வகுப்புகள் எடுக்கப்பட்டது.






இன்றைய வகுப்பில் டாக்டர் சுகன்யா, எண்ணெய் வித்து பயிர்களின் சாகுபடி தொழில் நுட்பங்கள் மிகவும் புரியும் படி அனைத்து தொழில் நுட்பங்களுடன் மாணவர் களுக்கு வகுப்பு எடுத்தார். வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் ஒருங்கிணைந்த உரம் மேலாண்மை வகுப்பு எடுத்தார்.

இதில் எளிதாக புரியும்படி இந்த பட்டயப் படிப்பின் நோக்கம், எவ்வாறு செயல்பட்டு விவசாயிகளுக்கு உதவி செய்திட வேண்டும், மற்றும் வேளாண்மை தொழில் நுணுக்கங்களுடன் பயிருக்கு தேவையான இயற்கை உரங்கள் ஆன, பசுந்தால் பயிர், பசுந்தால் இலை பயிர், உயிர் உரங்கள் மற்றும் அதன் செயல்பாடு மற்றும் அனைத்து வகையான இயற்கை எரு வகைகள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள் மற்றும் செயற்கை உரங்கள் கலப்பு உரங்கள், கூட்டு உரங்கள் உரங்களின் வகைப்பாடு அதன் செயல்பாடு, இரண்டாம் நிலை உரங்கள் அவற்றின் வகைப்பாடு மற்றும் செயல்பாடு, நுண்ணூட்ட உரங்கள் அவற்றின் வகைப்பாடு மற்றும் செயல்பாடுகள், நானோ உரங்கள் அவற்றின் செயல்பாடுகள், ஒருங்கிணைந்த உரம் மேலாண்மை பற்றி, வேளாண்மை உதவி இயக்குனர் தரகட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் மாணவர்களுக்கு எளிமையாக, அனைத்தும் புரியும்படி, பயனுள்ள வகையில், வகுப்பு எடுத்தார். இந்த வகுப்பில் 40 மாணவர்கள் பட்டய படிப்பிற்காக கலந்து கொண்டனர். வேளாண்மை அலுவலர் உழவர் பயிற்சி மையம் தனபால் கலந்து கொண்டார். கே வி கே தலைவர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் வசந்த் குமார் தெரிவித்தார்.



# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW  isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID  BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விளைச்சலை அதிகரிக்கும் ஊட்டச்சத்து நிர்வாகம் - இலை வழி உரமிடுதல்

பெருகி வருகின்ற மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம். அதே சமயம் விவசாய இடுபொருட்கள் செலவு மற்றும் விவசாய வேலை ஆட்கள் கட்டுபாடு போன்ற பிரச்சனை களையும் சந்திக்க வேண்டியுள்ளது. பருவநிலை மாற்றங்கள் மண்ணின் தன்மை மற்றும் பயிர்களுக்கு ஏற்ப நாம் இடுகின்ற இடுபொருட்கள் முழுமையாக பயிர்களுக்கு சேராமல் வீணாகின்றது.

எனவே விவசாய பெருமக்கள் இடுபொருட்கள் வீணாவதை தடுக்க நவீன தொழில் நுட்பங்களை தெரிந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் இடுபொருட்கள் செலவை குறைப்பதுடன் மண் வளத்தையும் பாதுகாக்க முடியும். அந்த வகையில் பயிர்களுக்கு தேவையான இடுபொருட்களை அழிக்க இலை வழி தெளிப்பு முறை என்பது பயனளிக்கக்கூடியது.

## இலை வழி உரமிடுதலின் முக்கியத்துவம்

இரண்டு சதவீத டி.ஏ.பி கரைசலை இலை வழியாகத் தெளிப்பது விளைச்சலை அதிகரிக்கும். இது அதிக செலவில்லாத ஒரு சிறந்த தொழில் நுட்பமாகும். டி.ஏ.பி (டை-அம்மோனியம் பாஸ்பேட்) உரம் சுமார் 17 சதம் தழைச்சத்தையும் 46 சதம் மணிச்சத்தையும் கொண்ட உரமாகும். இதைத் தெளிப்பதால் இரண்டு சத்துக்களும் உடனடியாக இலைகள் மூலம் பயிருக்குக் கிடைக்கின்றன. சாதாரணமாக பயிர்கள் பூக்கும் பருவத்திற்குப்



பிறகு வேர்களில் ஊட்டச்சத்து எடுக்கும் தன்மை குறைந்து விடும். அதோடு மட்டுமல்லாமல் மண்ணிலிருந்து ஊட்டச்சத்து கிடைப்பது குறைந்துவிடும். இத்தகைய நிலை நெல் தரிசு நிலங்களிலும் காணப்படுகின்றது. ஆகையால் தழைச்சத்து மற்றும் மணிச்சத்து கொண்ட டி.ஏ.பி கரைசலைத் தெளிப்பதன் மூலம் இலைவழியாக இவை உள்ளே சென்று பயனளிக் கின்றன.

பூக்கள் பூத்த பின் உற்பத்தி செய்யப்படும் மாவுச்சத்து தான் விதைக்குக் கிடைக்கிறது. ஆகையால் டி.ஏ.பி மூலம் கிடைக்கும் தழைச்சத்து இலைகளைப் பச்சையாக வைத்திருந்து அதிக மாவுச்சத்து உற்பத்திக்கு உதவி செய்கிறது.

பயிறுவகைப் பயிர்களில் வேர் முடிச்சுகள் மூலம் தழைச்சத்தை நிலைநிறுத்தும் தன்மை உள்ளது. இந்தச் செயல்பாட்டுக்கு மாவுச்சத்து தேவைப்படும். அதே சமயம் விதைகளுக்கும் மாவுச் சத்து தேவைப்படும். ஆகவே இந்த இரண்டு தேவைகளையும் சரியாகப் பூர்த்தி செய்தால் தான் நல்ல விளைச்சல் கிடைக்கும். டி.ஏ.பி மூலம் கிடைக்கும் தழைச்சத்து இலைகளில் அதிக மாவுச்சத்து உற்பத்திக்கு உதவி செய்து நல்ல பருமனான மணிகள் உருவாக உதவுகிறது.

**பயறுவகை பயிர்களின் முக்கியத்துவம்**

தானியப் பயிர்களுடன் ஒப்பிடும் போது பயறுவகை பயிர்கள் மண்ணமைப்பும், நீர் உட்புகுதலையும் அதிக அளவு மேம் படுத்துகின்றன. துவரை போன்ற பயிர்கள் அதிகளவில் இலை களைக் கொட்டி அங்கக பொருட்களை மண்ணில் சேர்க்கின்றன. மேலும் மண்வளம் மேம்படுத்தப்படுவதன் மூலம் நுண்ணுயிர் களின் செயல்திறன் அதிகமாகி பயிர்ச்சத்துக்கள் இடம் பெயர்வதும் அதிகமாகிறது. பயிறுவகை பயிர்களின் வேர்களில் காணப்படும் முடிச்சுக்களில் இருக்கும் பாக்டீரியா காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து மண்ணில் நிலைப்படுத்துவதால் பயிருக்கு இடவேண்டிய தழைச்சத்தில் 20 சதம் வரை குறைத்து இட்டாலே போதுமானது.

**பயிறு வகைகளுக்கு இலை வழி உரமிடல்**

எக்டருக்கு 10 கிலோ டி.ஏ.பி உரத்தை 25 லிட்டர் தண்ணீரில் 12 மணி நேரம் ஊறவைக்க வேண்டும். பின்பு தெளிக்கும் சமயம் தெளிந்த கரைசலை மட்டும் எடுத்து 475 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

பூக்கும் நிலையில் ஒரு முறையும், காய்கள் பிடிக்கும் தருணத்தில் மறுமுறையும் காலை அல்லது மாலை நேரத்தில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்வதனால் 20 சதவிகிதம் கூடுதல் மகசூல் கிடைக்கும்.

### மகசூலை அதிகரிக்க

பயறுவகைப் பயிர்களுக்கு டி.ஏ.பி தெளிப்பு தவிர துத்தநாக சல்பேட் கரைசல் (0.5 %) மற்றும் சோடியம் மாலிப்பேட் கரைசல் (0.001%) ஆகியவற்றைத் தனித்தனியாக கைத்தெளிப்பான் மூலம் மாலை வேளையில் புஓக்கும் தருவாயில் தெளிப்பதன் மூலம் மகசூலை அதிகரிக்கலாம்.

100 பி.பி.எம் சாலிசிலிக் அமில கரைசலை (10 லிட்டர் நீரில் 1 கிராம்) பூப்பதற்கு முன்பு ஒரு முறையும் 15 நாட்கள் கழித்து மறுமுறையும் தெளிப்பதன் மூலம் விளைச்சலை அதிகரிக்கலாம்.

பச்சைப்பயிரில் எத்ரல் 150 பி.பி.எம் என்ற அளவில் விதைத்த 35 மற்றும் 45வது நாட்களில் தெளிப்பதால் விளைச்சலை அதிகரிக்கலாம்.

### பூ உதிர்வதைத் தடுக்க

பயறுவகைகளில் பூக்கள் மற்றும் பிஞ்சுகள் அதிக அளவில் உதிர்வது மிக முக்கிய பிரச்சனையாகும். இதனை குறைத்து விளைச்சலை அதிகரிக்க 1 லிட்டர் நீரில் 0.5 மி.லி. பிளானோ பிக்சை கலந்து பூக்கும்போது ஒரு முறையும் 15 நாட்கள் கழித்து மறு முறையும் தெளிக்க வேண்டும். இதனால் பூக்கள் உதிர்வது குறையும். மற்றொரு முறையில் ஒரு ஏக்கருக்கு டி.ஏ.பி 4 கிலோ யூரியா 2 கிலோ பொட்டாசியம் 1 கிலோ மற்றும் பிளானோபிக்ஸ்தி 185 மி.லி கலந்து தெளிப்பதன் மூலம் விளைச்சலை அதிகரிக்கலாம். ஒரு ஏக்கருக்கு தேவையான டி.ஏ.பி 4 கிலோ யூரியா 2 கிலோ, பொட்டாசியம் 1 கிலோ உரங்களை முதல் நாள் மாலையே 10 லிட்டர் நீரில் ஊறவைக்கவும். தெளிந்த 10 லிட்டர் நீருடன், 190 லிட்டர் தண்ணீர் மற்றும் பிளானோபிக்தி 185 மிலி சேர்த்து விதைத்த 25 முதல் 30 நாட்களிலும் மற்றும் 15 நாட்கள் கழித்தும் மாலையில் இரண்டு முறை தெளிக்க வேண்டும். பயறுவகைகளில் பயிர்களில் புஓக்கின்ற 25 சதவிகித பூக்களே காய்க்கும். பூச்சி நோய் தாக்குதல் நுண்ணூட்ட பற்றாக்குறை, கடுமையான வறட்சி நீர் தேங்குதல் காற்றின் வேகம் அதிகமாக

இருத்தல் போன்ற காரணங்களால் பூக்கள் அதிகம் உதிர்கின்றன. இதனை பயிர் ஊக்கியாக நாப்தலின் அசிட்டிக் ஆசிட் (என்.ஏ.ஏ) தெளித்து பூ உதிர்வதைக் கட்டுப்படுத்துவதால் 10 – 20 சதம் மகசூல் அதிகரிக்கலாம்.

**நெல்**

சாம்பல் சத்து பயிரின் வளர்ச்சிக்கு மட்டுமின்றி வறட்சி மற்றும் உப்புத்தன்மையைத் தாங்கும் சக்தியை அதிகரிக்கிறது. நேரடி நெல் விதைப்பு மற்றும் நெல் தரிசுப் பயிர்களில் மூரியேட் ஆப் பொட்டாஷ் 1 சதவிகிதம் உரத்தைப் பூக்கும் பருவத்தில் தெளிப்பதன் மூலம் இலைகளின் வழியாக வெளியேறும் நீரின் அளவைப் பாதியாகக் குறைத்து விளைச்சலை அதிகரிக்கிறது. 2 சதவிகிதம் டி.ஏ.பி. கரைசலை தரிசு நில நெல் சாகுபடியில் விளைச்சலை அதிகரிக்க பூக்கும் பருவத்தில் தெளிக்க வேண்டும்.

**சோளம் மற்றும் கம்பு**

சோளம் மற்றும் கம்புப்பயிரின் விளைச்சலை அதிகரிக்க 0.5 சதவிகிதம் துத்தநாக சல்பேட், 0.5 சதவிகிதம் காப்பர் சல்பேட், மற்றும் 0.2 சதவிகிதம் போரிக் அமிலம் கரைசலை பூக்கும் முன்பும் பூக்கும் பருவத்திலும் தெளிக்க வேண்டும்.

**பயன்கள்**

டி.ஏ.பி கரைசலை இலை வழியாக தெளிப்பதன் மூலம் தழைச்சத்து மற்றும் மணிச்சத்து இலை வழியாக உள்ளே சென்று மாவுச்சத்து உற்பத்தியை (கார்போஹைட்ரேட்) அதிகரிக்கிறது. பயிரில் பூச்சி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்கிறது. பூ பிஞ்சுகள் உதிர்வதை தடுத்து அதிக காய்கள் பிடிக்க உதவுகிறது. 20 சதவீதம் வரை மகசூலை அதிகரிக்கிறது. விதைகளின் பளபளப்பு தன்மையை அதிகரிப்பதால் வணிக ரீதியாக நல்ல விலை கிடைக்கிறது.

**ஊட்டச்சத்து டானிக்**

விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு தமிழக வேளாண்மை பல்கலைக் கழகத்தில் பயறு வகைகள், நிலக்கடலை, பருத்தி, கரும்பு மற்றும் மக்காச்சோளம் போன்ற வற்றில் விளைச்சலை அதிகரிக்க ஊட்டச்சத்து டானிக் உற்பத்தி செய்கிறது.

இந்த டானிக்கில் பயிருக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் அடங்கியுள்ளன. ஊட்டச்சத்து டானிக்கை இலை வழியாக தெளித்து விளைச்சலை அதிகரிக்கலாம்.

**TNAU பயறு ஒன்டர் பயன்படுத்தும் முறை**

ஒரு ஏக்கருக்கு தேவையான 2.25 கிலோ TNAU பயறு ஒன்டரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பூக்கும் தருணத்தில் ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும். இதனுடன் தேவையான அளவு ஒட்டும் திரவம் சேர்க்கவும்.




**பயன்கள்**

பூக்கள் உதிர்வது குறையும் பயறு விளைச்சல் 20 சதம் வரை கூடும் வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கும்.

**TNAU நிலக்கடலை ரிச்**

ஒரு ஏக்கருக்கு தேவையான 2.20 கிலோ TNAU நிலக்கடலை ரிச் பூஸ்டரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பூக்கும் தருணத்தில் மற்றும் காய் பிடிக்கும் பருவத்தில் தேவையான அளவு ஒட்டும் திரவம் சேர்த்து இலை வழியாக தெளிக்க வேண்டும்.

**பயன்கள்**

அதிக பூ பிடிக்கும் திறன், குறைந்த பொக்கு கடலைகள், விளைச்சல் 15 சதம் வரை கூடும், வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கும்.

**TNAU கரும்பு பூஸ்டர்**

ஏக்கருக்கு 2, 3 மற்றும் 4 கிலோ முறையே கரும்பு நட்ட 45, 60 மற்றும் 75 ஆவது நாட்களில் 200 லிட்டர் தண்ணீருடன் தேவையான அளவு ஒட்டும் திரவம் சேர்த்து தெளிக்க வேண்டும்.

**பயன்கள்**

இடைக்கணுக்களின் நீளம் கூடும் கரும்பின் வளர்ச்சி மற்றும் எடை அதிகரிக்கும் விளைச்சல் 20 சதம் வரை அதிகரிக்கும் சர்க்கரை கட்டுமானம் கூடும் வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கும்.

**TNAU மக்காச்சோளம்**

மேக்சிம் ஒரு ஏக்கருக்கு தேவையான 3 கிலோ கரைசலை 200 லிட்டர் தண்ணீர் மற்றும் தெளிப்பு திரவத்துடன் சேர்த்து ஆண் மஞ்சரி மற்றும் மணி உருவாகும் பருவத்தில் தெளிக்க வேண்டும்.

**பயன்கள்**

மணி பிடிக்கும் திறன் அதிகரிக்கும். விளைச்சல் 20 சதம் வரை கூடும் வறட்சியைத் தாங்கும் திறன் அதிகரிக்கும்.

**TNAU பருத்தி பிளஸ்**

ஒரு ஏக்கருக்கு தேவையான 2.5 கிலோ கரைசலை 200 லிட்டர் தண்ணீர் கலந்து பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவத்தில் தெளிக்க வேண்டும்.

**பயன்கள்**

பூ மற்றும் சப்பைகள் உதிர்வது குறையும் காய்கள் முழுமையாக வெடித்து, சீரான அறுவடைக்கு வழி வகுக்கிறது. விளைச்சல் 18 சதம் வரை அதிகரிக்கும் வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கும்.

**கவனிக்க வேண்டியவை**

செடிகள் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும். மாலை வேலையில் தெளிக்க வேண்டும். கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவும். நல்ல நீரை பயன்படுத்தவும். பூச்சி மற்றும் நோய் மருந்துகளுடன் கலந்து தெளிக்கக்கூடாது.

**பனானா சக்தி : வாழை நுண்ணூட்டக் கலவை**


பருவமழை காரணமாக மழை நீரைத் வாழைத் தோட்டங்களி லிருந்து வடிக்கும் பொழுது வாழைக்கு மிக முக்கியமாகத் தேவைப் படும் நுண்ணூட்டச் சத்துக்குகளும், வீணாக வாய்ப்பு உள்ளது. இந்த இழப்புகளைச் சரிகட்ட, வாழைக்கு நுண்ணூட்டச் சத்துக்கள் இடுவது மிகவும் அவசியம். இதற்கு, திருச்சி தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தின், வாழை நுண்ணுட்டக் கலவையான ‘பனானா சக்தி’-யை இரண்டு சத கரைசலாக (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 20 கிராம்) இலைமேல் 4, 5, 6, 7வது மாதங்களில் தெளிக்கவும்.

**பயன்கள்**

20% சதவீத கூடுதல் மகசூல், சிறந்த தரம்.

எனவே சீரிய தொழில் நுட்பங்களான இரகம் விதை நேர்த்தி விதைப்பு முறை பயிர் எண்ணிக்கை பராமரிப்பு ஒருங்கிணைந்த பயிர்ப்பராமரிப்பு இவற்றுடன் இலை வழி உரமிடும் முறையைக் கடைப்பிடித்தால் விளைச்சல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. வறட்சி காலங்களில் மண்ணில் ஊட்டச்சத்துக்களை இடுவதை விட இலை வழியாக இடுவது வாலழ மற்றும மானாவாரிப் பயிர்களுக்கு மிகவும் சிறந்ததாகும். இலை வழி உரமிடுபோது அந்த பகுதி வேளாண்மை விஞ்ஞானிகள் அல்லது வேளாண் அலுவலர்களை தொடர்பு கொண்டு அலோசனை பெற்ற பின்னரே பயன்படுத்த வேண்டும்.

தகவல் : ***முனைவர் ச.நித்திலா, அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சி, பி.ரவிச்சாமி, உதவித் தலைமை தொழில்நுட்ப அதிகாரி, தேசிய வாழை ஆராய்ச்சி மையம், திருச்சி மற்றும் முனைவர் கே.சி.சிவபாலன், தலைவர், மித்ரா பண்ணை ஆலோசனை, சுற்றுச்சூழல் மற்றும் வேளாண்மை ஆராய்ச்சி மையம் (CREA), திருச்சி, தமிழ்நாடு.***


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333